# வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு

LKI

# லக்ஷ்மன் கதிர்காமர் சர்வதேச உறவுகள் மற்றும் மூலோபாயக் கற்கைகள் நிறுவனம்

2000-ஆம் ஆண்டின் 45-ஆம் இலக்க இலங்கை மூலோபாயக் கற்கைகள் நிறுவனச் சட்டத்தின்படி நிறுவப்பட்டு, 2006-ஆம் ஆண்டின் 32-ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட லக்ஷ்மன் கதிர்காமர் சர்வதேச உறவுகள் மற்றும் மூலோபாயக் கற்கைகள் நிறுவனம் (LKIIRSS), பாதுகாப்பு, தேசியப் பாதுகாப்பு, சட்டம், பொருளாதாரம், கலாசார உறவுகள், விவசாயம், சுற்றுச்சூழல் மற்றும் இலங்கையின் சர்வதேச உறவுகள் குறித்த ஆய்வுகளுக்கு அர்ப்பணிக்கப்பட்டதொரு பல்துறை ஆராய்ச்சி நிறுவனமாகச் செயற்படுகிறது.

லக்ஷ்மன் கதிர்காமர் நிறுவனம் (LKIIRSS) தனது நிறைவேற்றுப் பணிப்பாளராகப் பணியாற்ற ஒரு ஆற்றல்மிக்க நபரைத் தேடுகிறது. நிறைவேற்றுப் பணிப்பாளர், சிறந்த நிர்வாகத் திறன்களைக் கொண்டவராகவும், பரந்த அரசாங்க, தூதரக மற்றும் கல்விச் சமூகங்களுடன் ஈடுபடும் நிரூபிக்கப்பட்ட திறனைக் கொண்டவராகவும் இருக்க வேண்டும்.

| | |
|---|---|
| பதவி | நிறைவேற்றுப் பணிப்பாளர் |
| இடம் | கொழும்பு, இலங்கை |
| சம்பளம் | 2025.03.25 எனத் திகதியிடப்பட்ட முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கை இல: 01/2025 இன் படி<br>HM 2-2-2025 ரூ.(163,620 - 12 - 4,850 - 221,820)<br>இருப்பினும், முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கை இல: 01/2025-இன் அட்டவணை II-இன் படியே, 2027.01.01 வரை சம்பளம் வழங்கப்படும். ஆரம்ப மொத்த சம்பளம்: ரூ.211,270/- (அடிப்படை சம்பளம்- ரூ.142,610/- + கொடுப்பனவுகள்- ரூ.68,660/-) (தொலைபேசி, வாழ்க்கைச் செலவுகள் மற்றும் எரிபொருள் கொடுப்பனவுகள் ஆகியவை அடங்கும்.) |
| பணி வகை | முழுநேரம் |
| பிரதான பொறுப்புகள் | 1. லக்ஷ்மன் கதிர்காமர் நிறுவனத்தின் முகாமை மற்றும் நிர்வாகம்<br>2. இலங்கையிலும், வெளிநாடுகளிலும் நிறுவனத்தின் நலன்களை மேம்படுத்துதல் மற்றும் முன்னேற்றுதல்<br>3. பல்துறை ஆராய்ச்சி அதிகாரிகள் குழுவை முகாமை செய்தல் |
| விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி | 2026 ஜூலை 13 |

| | |
|---|---|
| மின்னஞ்சல் முகவரி<br>addl.secadmin@mfa.gov.lk | முகவரி:<br>மேலதிகச் செயலாளர் (நிர்வாகம்),<br>பொது நிர்வாகப் பிரிவு,<br>வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு, குடியரசு கட்டிடம், கொழும்பு - 01,<br>இலங்கை. |

## தகுதிகள் மற்றும் கல்வித் தகைமைகள்

**ஒவ்வொரு விண்ணப்பதாரரும்:**

- இலங்கையின் குடிமகனாக இருக்க வேண்டும்.
- பதவிக்குரிய கடமைகளை ஆற்றுவதற்கும், தீவின் எந்தப் பகுதியிலும் பணியாற்றுவதற்கும் உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் தகுதியுடையவராக இருக்க வேண்டும்.
- சிறந்த குணநலன்களைக் கொண்டவராக இருக்க வேண்டும்.

**கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம்**

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள் (கீழே 01 அல்லது 02)**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட வணிக முகாமைத்துவம், மனிதவள முகாமைத்துவம், வணிக நிர்வாகம், பொது நிர்வாகம், வர்த்தகம், பொருளாதாரம், சர்வதேச உறவுகள் மற்றும் மூலோபாயக் கற்கைகள் அல்லது பதவியின் விடயப்பரப்புடன் தொடர்புடைய வேறு ஏதேனும் துறையில் இளமாணிப்பட்டம்

   **மற்றும்**

   பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட வணிக முகாமைத்துவம், மனிதவள முகாமைத்துவம், வணிக நிர்வாகம், பொது நிர்வாகம், பொதுக் கொள்கை, வர்த்தகம், பொருளாதாரம், சர்வதேச உறவுகள் மற்றும் மூலோபாயக் கற்கைகள் அல்லது பதவியின் விடயப்பரப்புடன் தொடர்புடைய வேறு ஏதேனும் துறையில் ஒரு முதுகலைப் பட்டம் அல்லது பதவியின் விடயப்பரப்புடன் தொடர்புடைய அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை பட்டய நிறுவன உறுப்பினர் தகுதி

   **மற்றும்**

   முதல் பட்டப்படிப்பை முடித்த பிறகு, முகாமைத்துவ தரத்திற்குரிய பதவியில் குறைந்தபட்சம் 18 ஆண்டுகள் பணி அனுபவத்தைக் கொண்டிருத்தல். இந்த 18 ஆண்டுகளில், குறைந்தது 5 ஆண்டுகள் ஒரு பெருநிறுவனம், அதிகாரசபை, நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை அமைப்பில் நிரூபிக்கப்பட்ட அனுபவத்துடன் சிரேஷ்ட முகாமைத்துவப்பதவியொன்றை வகித்திருத்தல் வேண்டும்.

   **அல்லது**

2. வணிக முகாமைத்துவம், மனிதவள முகாமைத்துவம், வணிக நிர்வாகம், பொது நிர்வாகம், வர்த்தகம், பொருளாதாரம், சர்வதேச உறவுகள் மற்றும் மூலோபாயக் கற்கைகள் அல்லது பதவிக்குரிய விடயப்பரப்புடன் தொடர்புடைய பிற துறைகளில், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட இளமாணிப்பட்டம்.

   **மற்றும்**

   வணிக முகாமைத்துவம், மனிதவள முகாமைத்துவம், வணிக நிர்வாகம், பொது நிர்வாகம், அரச கொள்கை, வர்த்தகம், பொருளாதாரம், சர்வதேச உறவுகள் மற்றும் மூலோபாயக் கற்கைகள் அல்லது பதவியின் விடயப்பரப்புடன் தொடர்புடைய பிற துறைகளில் கலாநிதிப் பட்டம்.

   **மற்றும்**

   கலாநிதிப் பட்டம் பெற்ற பிறகு, ஒரு பெருநிறுவனம், அதிகாரசபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை நிறுவனத்தில் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தபட்சம் 05 ஆண்டுகள் நிரூபிக்கப்பட்ட செயற்திறன் மற்றும் முகாமைத்துவ அனுபவம்.

**உள்ளக விண்ணப்பதாரர்கள்**

தொடர்புடைய விடயப்பகுதியில் சிரேஷ்ட முகாமைத்துவ நிலை பதவியில் குறைந்தபட்சம் ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான பணி அனுபவம்.

**மற்றும்**

பல்வேறு குழுக்களை வழிநடத்தல் மற்றும் கட்டுப்படுத்தலில் நிரூபிக்கப்பட்ட திறன்.

மனித மற்றும் பிற வளங்களை முறையாகப் பயன்படுத்துதல் மற்றும் வினைத்திறனாக நிர்வகித்தல்.

**வயது வரம்பு**

35 வயதுக்குக் குறையாமலும், 55 வயதுக்கு மிகையாகாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு அதிகபட்ச வயது வரம்பு பொருந்தாது.

## மேலதிக குறிப்புகள்

அனைத்து விண்ணப்பதாரர்களும் ஒரு முகப்புக் கடிதம் மற்றும் சுயவிபரக் கோவையைச் (Resume) சமர்ப்பிக்க வேண்டும். இவற்றை PDF வடிவத்தில் மேற்கண்ட மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்ப வேண்டும். நேர்முகத்தேர்வின் போது ஒரு அச்சுப் பிரதியைச் சமர்ப்பிக்க வேண்டும்.

லக்ஷ்மன் கதிர்காமர் சர்வதேச உறவுகள் மற்றும் மூலோபாயக் கற்கைகள் நிறுவகத்தின் நிர்வாகச் சபையின் ஆணைக்கிணங்க வெளியிடப்பட்டது.

**செயலாளர்,**
**வெளிநாட்டு அலுவல்கள்,**
**வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு**
**கொழும்பு - 01.**